[2010 மே 11

இதுகுறித்து கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசியபோது, நிச்சயமாக இது பரிசீலிக்கப்படும் என்று அப்போது பதிலளித்தார்கள். இந்த ஆண்டு அதற்கு பெருமளவு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அம்பாசமுத்திரத்திற்கு அது வந்திருக்கிறது. ஆகவே, குத்தாலம் தொகுதியில் இருக்கின்ற குடவாசலுக்கு இதை சிறப்பினமாகக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தைத் தொடங்குவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று சொன்னால், அதுபற்றி அரசு அதிகாரிகள் சென்று பார்க்கிறபோது அங்கே 3 ஆயிரம் வாகனங்களுக்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தால்தான், அந்தப் பகுதியிலே புதிய அலுவலகம் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொன்னதைப்போல 3 ஆயிரம் வாகனங்களுக்கு அதிகமாக இருக்குமானால் அதுபற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

165—

ஆரம்ப சுகாதார நிலையம்

***29240—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2010 மே 11]

தங்களுடைய அனுமதியின் அடிப்படையில் திருத்திய விடையைப் படிக்கின்றேன். நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டினம் கிராமத்தில் 27–1–2009 ஆம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை, அரசாணை எண் 28–ன்கீழ், ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்பட்டு தற்போது அது செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 9–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிற்கு முன்னர் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. இருப்பினும், கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அதற்காக மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்து நன்றியை எனது தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியத்திற்கு உட்பட்ட காரைமேடு ஊராட்சி, தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. அதற்கான புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கான அரசு முன்மொழிவுகள் அரசுக்கு வந்திருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற காரைமேடு ஊராட்சிக்குப் பக்கத்திலேயே பல ஊராட்சிகள் இருக்கின்றன, அங்கெல்லாம் பல ஆயிரக்கணக்கான மக்கள் வசிக்கிறார்கள், 10 கிலோ மீட்டர் தொலைவிலே வேறு எந்த மருத்துவமனையோ, ஆரம்ப சுகாதார நிலையமோ இல்லை. எனவே, சீர்காழி தொகுதியிலே இருக்கக்கூடிய காரைமேடு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதிக்கு உட்பட்ட கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் கிட்டத்தட்ட 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. சீர்காழியில் பொது மருத்துவமனை சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் சொல்கிற கிராமத்திற்கும் சீர்காழி பொது மருத்துவமனைக்கும் இடைவெளி தூரம் ஒருசில கிலோ மீட்டர்தான். அதனால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றக்கூடிய வாய்ப்புகள் இல்லையென்று நினைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் இந்தக் காரைமேடு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாதிரவேலூர், கடவாசல், அல்லிவளாகம், செம்பதனிருப்பு போன்ற ஊராட்சிகளில் துணை சுகாதார மையங்கள் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, மத்திய அரசு அனுமதி அளித்தால், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தால், விஷ ஜந்துகள் அந்த ஆரம்ப சுகாதார

2010 மே 11]

நிலையங்களுக்குள் வரக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. இதுசம்பந்தமாக பல புகார்கள் வந்திருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, தமிழகத்திலே சுற்றுச்சுவர் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச்சுவர் அமைத்துத் தர முன்வருவார்களா என்று கேட்கும் அதேநேரத்தில் என்னுடைய நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிங்களேயர்புரி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவேண்டுமென்று பலமுறை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டாவது தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி சிங்களேயர்புரி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 1,519 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இப்பொழுது புதிய கட்டடங்கள் கட்டப்பட இருக்கின்றன. அதில், சொந்தக் கட்டடங்கள் இல்லாத 213 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. கட்டடம் கட்டுவதற்கு இப்பொழுது நிதி ஒதுக்கப்பட்டு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. Compound சுவர் வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதிமூலமாக ஒதுக்கீடு செய்து compound சுவர் கட்டலாம். Compound சுவர்கள் கட்டுவதற்கு விதிகள் இல்லை. அதனால் மாண்புமிகு உறுப்பினர்களே அவர்கள் சொந்த முயற்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலமாக கட்டிக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அவர் தரம் உயர்த்தவேண்டுமென்று கேட்டுள்ளார். விதிமுறைகளுக்கு உட்பட்டு அதைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கரை பேரூராட்சியிலே கடைமடை கிராமத்திலே துணை ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதிலே மாதந்தோறும் ஏறத்தாழ 20 பிரசவங்களுக்கு மேல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே தினந்தோறும் குறைந்தபட்சம் 500 பேருக்கு மேல் Out–patient–ஆக வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு என்னுடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்துகூட ஒரு துணைக் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறேன். ஆக, அந்தத் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற வேண்டும் என்று உங்களுடைய வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரம் உயர்த்துவது சம்பந்தமாக கேட்டிருக்கின்றார். கடந்த ஆண்டு 40 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, அந்த விதிமுறைகளுக்குட்பட்டிருந்தால், பரிசீலிக்கப்படும். இந்த ஆண்டு 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத்தான் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இங்கே கை தூக்குவதைப் பார்த்தால் 100 பேருக்கு மேலே கையைத் தூக்குகிறீர்கள். எல்லோருக்கும் அதேபதில்தான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். உட்காருங்கள்.

வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.